திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமான வேலைகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கட்டுமான வேலைகள் பிரிக்கப்பட்டு, பில்லர் வேலைகள், அதாவது கட்டிட வேலைகளைச் செய்வதற்கு ஒருவரையும், மேற்கூரை அமைப்பதற்கு ஒருவரையும் நியமித்து, கட்டிட வேலை முடிந்துவிட்டதாகவும், மேற்கூரை வேலையைச் செய்கிறவர்கள் காலதாமதம் செய்வதாகவும்—அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாமல் இருப்பதாகவும்—நான் கேள்விப்படுகிறேன். ஆகவே இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு, அங்கே இருக்கின்ற விவசாயிகள் நன்மையைக் கருதி உடனடியாக முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, வேலை தாமதமாவதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். வேலை தாமதமாவதைத் தவிர்த்து, விரைவிலே அந்தக் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

(உ) புகளூர் காகித ஆலைக்குப் பணியாளர்கள் நியமிக்கும் முறை.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''புகளூர் காகித ஆலையின் நிர்வாகம், பணியாளர்களை பணியில் அமர்த்த கடந்த இரண்டு வருடங்களாகச் செய்தித் தாளின் மூலம் விளம்பரப்படுத்தி முறையாக மனுச் செய்தவர்களுக்கு வேலை கொடுக்காததால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலையின் பல்வேறு பதவிகளுக்கு வேலை வாய்ப்பு நிறுவனம் மூலம் பணியாளர்கள் அமர்த்தப்படுகின்றனர். உயர் தகுதியும், அனுபவமும் உடைய நபர்கள் தேவைப்படும்போது முக்கிய நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. அவ் விளம்பரங்களின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள், தகுதி வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு, விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக் குழு மூலம் நேர்முகத் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வுக் குழு பரிந்துரை செய்யும் நபர்கள் இந்நிறுவன பதவிகளுக்கு தர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

2. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை இம் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகவும் நவீன தொழில் நுட்பம் கொண்ட ஆலையாகும். எனவே இந்த ஆலையில் பணி புரிய திறமை வாய்ந்த நபர்களை தேர்ந்தெடுப்பதில் இந்நிறுவனம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. சில பதவிகளுக்கு முதலில் நாளிதழ்களில் விளம்பரம் செய்திருந்த போதிலும், தேசிய உற்பத்தி மன்றத்தினரால் நடத்தப்பட்ட மனித ஆற்றல் பற்றிய கருத்தாய்வின் மூலம் இந்த பதவிகள் நிரப்பப்பட தேவை யில்லை என்று பின்னர் தெரியவந்ததால் அப்பதவிகள் நிரப்பப் படவில்லை. சில பதவிகளுக்கு நேர்முகத் தேர்வுக்கு வந்த விண் ணப்பதாரர்கள் ஆலைக்கு எதிர்பார்க்கப்பட்ட திறன் பெற் றில்லையாதலால் அத்தகைய பதவிகளும் நிரப்பப்பட இயல வில்லை. இப்பதவிகள் உரிய காலத்தில் நிரப்பப்படும்.

3. இளநிலை செயலக அலுவலர், பயிற்சி இரசாயன பொறி யாளர் போன்ற ஆறு பதவிகளுக்கு நாளிதழ்களில் செய்யப்பட்ட விளம்பரங்களின் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பிய விண்ணப்ப தாரர்களில் போதிய தகுதியுடைய நபர்கள் இல்லாததால் இப் பதவிகளுக்கு நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படவில்லை. ஆலைப் பொறியாளர் (மைய ஆய்வுத் தீர்வை), உதவி வன அலுவலர் போன்ற 5 பதவிகளுக்கும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் எந்த விண்ணப்பதாரரும் இப்பதவிகளுக்குத் தகுதி யுடையவர்களாக காணப்படவில்லை. எனவே இப்பதவிகள் நிரப் பப்படவில்லை. உற்பத்தி மற்றும் பயன் தொடர்பான உதவி இயந்திர பொறியாளர்கள் பதவிகளுக்கு நாளிதழ்களில் விளம் பரங்களின் மூலம் போதிய விண்ணப்பங்கள் வராததால் ஆலை யில் பணி புரிவோர்களுக்கே பதவி உயர்வு அளித்து இப்பதவி களை நிரப்பலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள், என்ற விவரம் இந்த அறிக்கையில் இல்லை. தாழ்த்தப்பட்ட மலைவாழ், பிரிவின ருக்கு இட ஒதுக்கீடுக் கொள்கை அங்கே பின் பற்றப்படவில்லை. அங்கே செக்யூரிட்டி போர்ஸ் என்று சொல்லக்கூடியவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புத் தரப்படவில்லை என்று புகார் வந்திருப்பதை அரசு அறியுமா? மேலும் கரூர், துறையூர், மணச்ச நல்லூர், திருவரம்பூர் ஆகிய பகுதிகளில் நரிக்குறவர்கள் அதிக மான அளவில் வாழ்ந்து வருகிறார்கள். அந்த நரிக்குறவர் களுக்கு இந்தக்காகித ஆலையில் வேலை கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை ஒரு இயந்திர மயமான ஆலை. அதிலே மிகக் குறைவான ஆட்கள்தான் இன்றைக்கு வேலை செய்கிறார்கள். ஆட்டோமேடிக் தொழிற்சாலை என்று சொல்லக்கூடிய ஆட்டோமேட்டிக் இண்டஸ்ட்ரியாக அது பணி

யாற்றிக் கொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே போனால் பார்க்க முடியும். ஆகவே குறைந்தது 500 பேர்களுக்குத்தான் அங்கே வேலை தரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அது பற்றிய புள்ளிவிவரங்கள் தற்போது என்னிடத்திலே இல்லை. ஆதி திராவிட மக்களுக்கு வேலை தரப்படவில்லை என்ற ஒரு குறைபாட்டைச் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி விசாரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தபால் மூலமாக தகவல் தருகிறேன்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேஷசாயி, கங்கப்பா, போன்ற காகித ஆலைகளில் இருந்து பயிற்சி பெற்றதாகப் பொய்ச் சான்றிதழ் பெற்ற நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் புகளூர் காகித ஆலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஒரு புகார் வந்திருக்கிறது. அரசுக்கு இது பற்றிய செய்திகள் தெரியுமா? அந்தப் புகாரை மேலும் ஆய்ந்து அப்படி பொய்ச் சான்றிதழ் பெற்று, வேலையில் சேர்ந்தவர்களைக் கண்டுபிடித்து, பணி நீக்கம் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? தக்க தண்டனை தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் என்னுடைய காதுக்கு இது வரை வரவில்லை. அது ஒரு வேளை புகாராக இருக்குமோ என்று எனக்குத் தெரியாது. அப்படித் தவறாக வேலையில் சேர்க்கப்பட்டிருப்பார்களேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்தும் பணியில் தாமதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். என். இராசேந்திரன், இரா. தாமரைக்கனி ஆகியோர், ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தூத்துக்குடி, புதுத்துறைமுகத்தில் 40,000 டன் எடையுள்ள கப்பல்கள் வருவதற்கு தற்போதுள்ள 27 அடி ஆழத்தை 30 அடி ஆழமாக்க 4 கோடி ரூபாய் செலவில் ஒப்பந்தக்காரருக்குப் பணி கொடுக்கப்பட்டும், 7 ஆண்டுகளாகியும் பணி நடக்காதது குறித்தும், இது குறித்து மாநில அரசு மைய அரசை வலியுறுத்துவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.